இப்போது சேர்க்கப்பட்டு விட்டார்கள். 3 மாத சம்பளம் கிடைக்காமலிருந்தால் கஷ்டம்தான் என்பதை அரசு உணர்கிறது. விரைவில் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ந. சிவஞானம்: தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒதுக்கீடு ஏதோ செய்து கொடுப்பதாகக் கூறி யிருக்கிறாரே, அது குறித்து அரசுக்குத் தெரியுமா

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. அவர்களுடைய பட்டியல்கள் எல்லாம் வந்தபிறகு உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

ஆ. இராணிப்பேட்டையில் குடிநீர் பற்றாக்குறை.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, ''இராணிப்பேட்டை ஆற்காட்டிற்குப் பொதுவாக உள்ள குடிநீர் திட்டத்தைத் தனித் தனியாகப் பிரித்து இராணிப்பேட்டையில் குடிநீர்ப் பற்றாக் குறை நிலையை நீக்கும் பொருட்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரவைமுன் விவர அறிக்கை ஒன்றை வக்கிறேன்.

அறிக்கை

வடஆற்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டை, ஆற்காடு ஆகிய நகராட்சிகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம் ஒன்றிற்கு அரசு 1956-ஆம் ஆண்டு அனுமதி அளித்தது. த்திட்டம் 1957-ஆம் ஆண்டு முதல் அமுலிலிருந்து வருகின்றது. இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ஆதாரம் பாலாறு ஆகும். இந்த திட்டத்தின் ழ் உச்ச கட்ட மக்கட் தொகை (1986), இரண்டு நகராட்சி களுக்கும் முறையே 40,000 எனக் கணக்கிடப்பட்டு, மொத்த குடிநீர்க் தேவை நாளொன்றுக்கு 36.4 இலட்சம் லிட்டர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு மொத்த மதிப்பீடாகிய ரூ.12.15 இலட்சத்தில் ரூ 6.34 லட்சம் ஆற்காடு நகராட்சியும், ரூ.5.81 லட்சம் ராணிப்பேட்டை நகராட்சியும் ஏற்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

2. தற்போது ஆற்காடு நகராட்சிக்கு தினசரி 27.55 லட்சம் லிட்டர் குடிநீரும் ராணிப்பேட்டை நகராட்சிக்கு தினசரி 10.9 லட்சம் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது,

3. எனினும் ஆற்காடு நகராட்சியின் மக்கட்தொகை எதிர் பார்த்ததைவிட கூடுதலாகிவிட்ட காரணத்தினால் ஓர் கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் உருவாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதின் காரணமாக அரசு 1974-ஆம் ஆண்டு ரூ.29.40 லட்சத்திற்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை அமுலாக்க

ஆணை பிறப்பித்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ் ஒரு தனித் தலைமைப் பணி இடம் ஆற்காடு நகராட்சிக்கென்று உருவாக்கப் படும். மற்றும் இந்த திட்டத்தின் கீழ் பகிர்மானக் குழாய்கள் அமைத்தல், நீர் நிலைத் தேக்கத்தொட்டிகள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த திட்டத்தின் கீழ பெரும் பாலான பணிகள் முடிவு பெற்று 77ஆம் ஆண்டு முதல் முன்னோடி குடிநீர்த்திட்டம் அமுலில் உள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்பெற்று ஆற்காடு நகராட்சிக்கு கூடுதலான தண்ணீர் அளிக்கப்படும். எனவே இந்த ஆற்காடு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் முழுமை பெற்றவுடன், இராணிப் பேட்டை நகராட்சிக்கு கூடுதலான குடிநீர்க் கிடைக்கப்படுவதுடன் இந்த நகராட்சியின் உட்பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு கணிசமான அளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

4. இருப்பினும், இராணிப்பேட்டை நகராட்சியை சுற்றி பல பெரிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள காரணத்தினாலும், மேலும் இந்நகராட்சியின் மக்கட் தொகை கணிசமான அளவு கூடுதலான காரணத்தினாலும், இராணிப்பேட்டை நகராட்சிக்கு மட்டும், தனியான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதின் காரணமாக குடிநீர் வடிகால் வாரியம் 78ஆம் ஆண்டு ஒரு விரிவான ஆய்வுப்பணி ய மேற்கொண்டு, 68 இலட்சம் ரூபாயில் ஒரு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அந்த உத்தேச மதிப்பீடு வாரியத்தின் ஆய்வில் உள்ளது. இதற்கான பராமரிப்புச் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2.75 இலட்சம் ஆகும் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் தற்போதுள்ள கூட்டுக் குடிநீர்த்திட்டத்தின் தலைமைப் பணியிடத்தில் உள்ள ஊற்று நீர்க் கிணறையும் பயன்படுத்துவதாக திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு கூடுதலாக புதிய ஊற்றுக் கிணறு ஒன்றும் 90 மீட்டர் நீளத்திற்கு காலரியும் போட உத்தேசித்துள்ளது. மற்றும் பகிர்மானக் குழாய்கள் அமைத்தல், நீரேற்று குழாய்கள் அமைத்தல், மேல் நிலை தேக்கத்தொட்டிகள் கட்டுதல், ஆகிய பணிகளும் எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் உச்ச கட்ட மக்கட் தொகையாகிய (2011) 90,000—க்கு தினசரி தேவையாகிய 81 இலட்சம் லிட்டர் குடிதண்ணீர் வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. இந்த குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நகராட்சியின் தீர்மானம் பெற்று, அரசு ஆணை பெற்றவுடன் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும். எனவே இந்த திட்டம் முழுமையாக நிறைவேறிய உடன் இராணிப்பேட்டை நகராட்சியின் குடி நீர்த்தட்டுப்பாடு முழுமையான அளவில் நிவர்த்தி செய்யப் படும்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, விவர அறிக்கை விளக்கமாக இல்லை. ஆங்காங்கு சில குறிப்புகளைத் தான் சொல்லியிருக்கிறார்கள். ஆற்காட்டிற்கும், இராணிப் பேட்டைக்கும் பொதுவான குடிநீர்த் திட்டம் இருக்கிறது.

இதனால் ஆற்காட்டிற்கும் சரியான வகையில் குடிதண்ணீர் கிடைப்பதில்லை; இராணிப்பேட்டைக்கும் சரியான வகையில் குடிதண்ணீர் கிடைப்பதில்லை. 53 சதவீதம் ஆற்காட்டிற்கும், மீதி இராணிப்பேட்டைக்கும் கிடைக்கிறது. இந்த மாதிரி நிலைமை இருப்பதால், இராணிப்பேட்டை வட்டாரத்தில் ஒரு ஆள், இரண்டு ஆள் ஆழத்திற்குப் பள்ளம் வெட்டி இரவு முழுவதும் தாய்மார்கள் குடிதண்ணீருக்காகக் காத்துக் கிடக்கின்ற அவல நிலை உருவாகியிருக்கிறது மேலும் காரை பெரியார் நகர் போன்று மேட்டுப் பகுதியில் இருக்கின்ற இடங்களுக்குக் குடிநீர் போவது கிடையாது. அதற்குக் காரணம் கேட்டால் தண்ணீர் குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களின் குறிப்பிலே ஒரு திட்டம் சொல்லப் பட்டிருக்கிறது. ஆற்காட்டுக்குப் புதிதாக ஒரு திட்டத்தை 1974-ஆம் ஆண்டில் ஆரம்பித்து, 1977 ஆம் ஆண்டிலே பைலட் ஸ்கீம் என்று கொடுத்திருக்கிறார்கள். அதைக் கொடுத்துவிட்டால் ஏற்கனவே இருக்கின்ற திட்டங்கள் இராணிப்பேட்டைக்கு வந்து விடும். இப்படிப் பிரித்துக் கொடுப்பதில் உள்ள சிரமம் என்ன? பைலட் ஸ்கீம் என்ற அந்தப் புதிய ஸ்கீமின் பிரகாரம், ஆற்காட்டுக்குப் புதிதாகத் திட்டத்தைக் கொடுத்து, பழைய திட்டத்தை முழுக்க முழுக்க இராணிப்பேட்டைக்குக் கொடுத்தால் இராணிப்பேட்டையில் உள்ள தண்ணீர்ப் பற்றாக்குறையை நீக்க முடியும். அதைச் செய்வதற்கு அரசு ஏன் தயங்குகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, 1974இல் உத்தரவு இட்டு 77இல் உள்ளதாகச் சொன்ன அந்த பைலட் ஸ்கீம் போட்டிருப்பதும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தான். இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இருக்கின்றன. இப்பொழுது உள்ள இரண்டு பிரச்னைகள் என்னவென்றால், இராணிப்பேட்டை நகராட்சியைச் சுற்றிப் பல பெரிய தொழிற் சாலைகள் அமைந்துள்ள காரணம் ஒன்று. மேலும் ஒன்று என்ன வென்றால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்திற்கு உதவியாக வந்தால் நன்றாக இருக்கும்; மேலும் இந்நகராட்சியின் மக்கட் தொகை கணிசமான அளவு கூடுதலான காரணம் என்பது மற்றொன்று. இராணிப்பேட்டை நகராட்சியிலே மட்டும் தனிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 68 இலட்சம் ரூபாயிலே, அதற்கான பராமரிப்புச் செலவுக்கு 2.75 இலட்சம் ரூபாய் ஆகும் என்று தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நகராட்சியின் தீர்மானம் பெற்று, அரசு ஆணை பெற்றவுடன் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அது செயலுக்கு வந்தபின் இராணிப்பேட்டை நகராட்சியின் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு முழுமையாக நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

துரை முருகன்: தலைவரவர்களே, இதிலே சிரமம் இருக்கிறது. இப்பொழுது இரண்டே இலட்சம் ரூபாய் பாரமரிப்புச் செலவுக்கென

கணக்கிடப்பட்டு ஒதுக்கி இருப்பதாக் சொல்கிறார்கள். நான் அரசாங்கத்தைக் கேட்பது, இதையாவது போட்டால் அந்த ஹெட்டிலேயிருந்து நேராக இராணிப்பேட்டைக்கு வருகின்ற அந்தக் குழாய்கள் புதிய குழாய்களாக அமைப்பதன் மூலம் தண்ணீர் ஜரூராக வரும் என்று சொல்கிறார்கள். எனவே, அந்தப் பராமரிப்புச் செலவையாவது உடனடியாகச் செய்து இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறையைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டே முக்கால் இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படவில்லை; பராமரிப்புச் செலவு இரண்டே முக்கால் இலட்சம் ரூபாய் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் இப்பொழுது நகராட்சியின் பரிசீலனையில் இருக்கிறது. நகராட்சியிடமிருந்து பதில் வந்த பிறகு, அரசு பரிசீலனை செய்த பிறகு திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டால் இராணிப்பேட்டையைப் பொறுத்தவரையில் குடிதண்ணீர்ப் பஞ்சம் என்ற பிரச்னை இருக்காது.

7. அரசினர் சட்டமுன்வடிவு

குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே: 1981 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு அ. ரகுமான்கான்: I oppose the introduction of thi Bill.

மாண்புமிகு அமைச்சரவர்கள் இதுகுறித்து ஏதாவது கருத்துக்கள் சொல்வதானால் சொல்லட்டும். இல்லையென்றால் நான் இதை அப்போஸ் செய்து பேசி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இப்பொழுது இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜ்தான்.

(முற்பகல் 10·20)

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, இந்தக் குறைந்த பட்சக் கூலி நிர்ணய மசோதாவை அறிமுகம் செய்ய அமைச்சர் அனுமதி கேட்டுள்ளார். இந்தச் சட்டத்தினுடைய 5-வது பிரிவும், 7-வது பிரிவும் அரசாங்கம், குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிப்பதற்காக கமிட்டிகள் போடவேண்டுமென்பதை அடிப்படையாக வைத்திருக்கிறது. 9-வது பிரிவின்கீழ் குழுக்கள் இருக்கின்றன. அந்தக் குழுவிலே இருக்கிற உறுப்பினர் பதவிகள் காலியாகிற காரணத்தாலோ, அல்லது அதிலே சில டிஃபக்டுகள்